செ.வெ-343 நாள்:-10.06.2011

## ஜூன் 12—ல் சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்

### மாநிலம் முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது என அரசு முதன்மைச் செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., தகவல்

ஜூன் 12—ல் சர்வதேச அளவில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகின்றது. இதனையொட்டி தமிழகம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அன்றைய தினம் விடுமுறை தினமாக இருப்பதால், ஜூன் 10 அன்று அனைத்து மாவட்டங்களிலும் அரசு அலுவலகங்களில் கீழ்கண்டவாறு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

"இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமாற உறுதி கூறுகிறேன்".

சென்னையில் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் தொழிலாளர் துறை அலுவலர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதனை தொடர்ந்து இம்மாதம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பேரணிகள், சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன என்று முதன்மைச் செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட தொழிலாளர் துறை தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை உதவியுடன் தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 16 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் (National Child Labour Project) என்ற பெயரில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், பருத்தி தொழில்களில் குழந்தைகள் ஈடுபடுவதை தடுத்து அவர்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (Integrated Child Protection Programme) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்கள் செயல்படும் மாவட்டங்களில் 14 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லாமல் வேலைக்குச் செல்லும் குழந்தைகளை சட்ட அமுலாக்க அதிகாரிகள் கண்டறிந்து, அவர்களை மீட்டெடுத்து சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கின்றனர். மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்காக தமிழகத்தில் தற்பொழுது 384 சிறப்புப் பள்ளிகள் நடைபெறுகின்றன. இதில் 14464 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு தமிழக அரசு சார்பில் இலவச மதிய உணவு, சீருடைகள், ஆசிரியர்களுக்கான ஊக்கத் தொகைகள், பயிற்சிகள், கல்வி உபகரணங்கள், குழந்தைகளுக்கு ஆர்வத்தை தூண்டிட கைத்தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு குழந்தைக்கும், மத்திய அரசால் ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் மாத ஊக்கத் தொகை ரூ.100/–லிருந்து ரூ.150/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த சிறப்புப் பள்ளிகளில் 2 ஆண்டுகள் பயிற்றுவிக்கப்பட்டு பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவர்கள் இந்த ஆண்டு நடைபெற்ற 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கான அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தேர்ச்சி பெற்றுள்ளனர். சிலர் 95%-க்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர் என்பது அனைவரையும் வியக்க வைத்துள்ளது. இதுவரை 78,000 மேற்பட்ட மாணவர்கள் சிறப்புப் பள்ளிகளில் படித்து, பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தற்பொழுது உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் நல்ல முறையில் பயின்று வருகின்றனர். சிலர் பொறியியல் பட்டம் பெற்றுள்ளனர். பலர் பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றி வருகின்றனர் என்பது பெருமைப்படத்தக்கது.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட தமிழக அரசு செயல்திட்டம் வகுத்துள்ளது. அதன்படி, குழந்தைதளை பணியில் அமர்த்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பணிக்கு அமர்த்தினால் ரூ.20,000/– அபராதம் மற்றும் 1 வருட சிறை தண்டனை வழங்கப்படும். தொழிற்சாலைகள், கடைகள் உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவோரை திடீர் ஆய்வுகளின் மூலம் கண்டறிந்து சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலர்கள் தலைமையில் பிறதுறை அலுவலர்கள் அடங்கிய குழுவினர் அனைத்து மாவட்டங்களிலும் அதிரடி ஆய்வுகள் நடத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. என்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட பெற்றோர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் முதன்மைச் செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9